# தற்கால இலக்கியங்களின் போக்கு

*ராஜேஷ் வைரபாண்டியன்*

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7901

அனைவருக்கும் வணக்கம்,

இந்த நிகழ்வில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பளித்த போப் கல்லூரி நிர்வாகத்திற்கும், முதல்வர் அவர்களுக்கும், தமிழ்த்துறை பேராசிரியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்கால இலக்கியங்களின் போக்குஎன்கிறதலைப்பில் பேச அழைக்கப்பட்டிருக்கிறேன். அதற்குள் செல்வதற்கு முன் என்னைப் பற்றிய சிறியதொரு அறிமுகத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

என்னுடைய பெயர் ராஜேஷ் வைரபாண்டியன், சாயர்புரத்தின் அருகிலிருக்கும் நடுவைக் குறிச்சியில் பிறந்து போப் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கல்வி கற்று தற்போது ஹாங்காங் தேசத்தில் கணிப்பொறிமென்பொருளாளனாக பணிபுரிந்து வருகிறேன். நான்கு கவிதை தொகுப்புகள், மூன்று சிறுகதை தொகுப்புகள், இரண்டு குறுநாவல்கள், ஒரு சிறார் நாவல், ஒரு நாவல் ஆகியவை இலக்கிய உலகிற்கு என்னால் ஆன பங்களிப்பு. சிறந்த கவிதை நூலுக்கான சுஜாதாவிருதும் பிரமிள் விருதும் 2019ல் எனக்கு வழங்கப்பட்டது. கடந்த வருடம் என்னுடைய வேங்கை வேட்டை எனும் குறுநாவல் எழுத்து பிரசுரம் நடத்திய குறுநாவல் போட்டியில் முதல் பரிசைப் பெற்றது.

இவை தவிர ஆங்கிலத்தில் ஐந்து நூல்கள் எழுதியிருக்கிறேன்.

நாம் ஏன் இலக்கியத்தை வாசிக்க வேண்டும் என்பதற்கு எழுத்தாளார் ஜெயமோகன் எழுதியவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழிலக்கிய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளை நிலைச்சக்தி மேலோங்கிய காலம் எனலாம். இலக்கியம் தேங்கிக்கிடந்தது. புராணங்களும் சிற்றிலக்கியங்களும் எழுதப்பட்டன. அவை கோயில்களையும் சிறு மன்னர்களையும் சார்ந்து வாழ்ந்த கவி ராயர்களால் அந்தச் சபைகளைச் சேர்ந்த சிலருக்காக உருவாக்கப்பட்டன. இந்தக் காலகட்டமே ஒட்டுமொத்தமாகதமிழகத்தில் பெரிய அரசுகள் இல்லாமலாகி வறுமையும் பண்பாட்டுத் தேக்கமும் நிலவிய காலம் தான். தமிழகம் நிலப்பிரபுக்களின் பிடியில் இருந்தது. அந்தத் தேக்க காலத்தில் இருந்து மிகுந்த வீச்சுடன் எழுந்த மாற்றத்தின் விசை யையே நாம் சுப்ரமணிய பாரதி என்று சொல்கிறோம். பாரதியும் ஒரு கவிராயராக எட்டயபுரம் அரசரின் சபையில் இருந்தவர் தான்.

ஆனால் அந்த பதவியை உதறி அவர் சென்னை நகரின் இதழியல் உலகுக்கு வந்து சேர்ந்தார். அந்தப் பயணமே பண்டைய இலக்கியத்தில் இருந்து நவீன இலக்கியம் நோக்கிய நகர்வின் அழகிய குறியீடு. ஒன்று எட்டையபுரம், இன்னொன்று சென்னை!

பாரதியே தமிழ் நவீன இலக்கியத்தின் முக்கியமான புள்ளி. தன் கவிதையை பாரதி நவகவிதை என்றே எப்போதும் சொல்கிறார். புதியன வேண்டும் என்ற குரலை நாம் பாரதியிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறோம். “புத்தம் புதிய கலைகள் மெத்தவளருது மேற்கே அத்தனையும் கொணர்ந்திங்கு சேர்ப்போம்” என்ற அறை கூவலை அவனது கவிதைகளும் கட்டுரைகளும் எழுப்பிக் கொண்டே இருந்தன. பாரதியின் ஒட்டுமொத்த அறிவியக்கத்தையே புதுமை நாட்டம் என்று சொல்லலாம்

ஆகவே தான் பாரதி நவீன இலக்கியத்தின் எல்லா துறைகளிலும் புதிய அலை உருவாக முதற்புள்ளியாக அமைந்தான். தமிழின் நவீன உரைநடையின்தொடக்கம் அவனே. தமிழ் இதழியலும் அவனிடமிருந்தே ஆரம்பிக்கிறது. தமிழ்க்கலைச் சொல்லாக்கம் அவனால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்ச் சிறுகதையும் தமிழ் நாவலும் அவன் விதையிட்டவை. தமிழ்ப்புதுக் கவிதைக்கும் அவனே பிதா. பாரதி தொடங்கி வைத்ததே தமிழ் நவீன இலக்கியம்.

சரி, நவீன இலக்கியம் பாரதியில் துவங்கியது என்றால் அதன் பிறகு எழுதவந்தவர்களின் யார் எழுத்தை வாசிப்பது என்கிற குழப்பம் நமக்குத் தோன்றலாம். இலக்கிய வாசிப்பிற்குள் முதன்முதலாக நுழையும் போது எல்லோருக்கும் ஏற்படுகின்ற தடுமாற்றமே இவை.

எனக்கும் அந்ததடுமாற்றம் நிகழ்ந்தது. சிறுவர்மலரிலும் கல்கண்டு அம்புலிமாமாவிலும் ஆரம்பித்தவாசிப்புப் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கல்கி, சாண்டில்யன், பாலகுமாரன், ஜெயகாந்தன் என விரிவடைந்த போது தான் இலக்கியம் என்பது எவ்வளவு உன்னதமானது என்பதும் வாசிப்பின்பம் தருகின்ற அக இன்பத்தை வேறெதுவும் தருவதில்லை என்பதை உணர்ந்தேன்.

அதன் தொடர்ச்சியாக பல்வேறு நவீன இலக்கிய முன்னோடிகளின் எழுத்தைத் தேடித் தேடிவாசிக்க ஆரம்பித்தேன். நினைவிலிருந்து சில பெயர்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அசோகமித்திரன்
அம்பை
அ. முத்துலிங்கம்
ஆதவன்
இந்திரா பார்த்தசாரதி
எஸ். ராமகிருஷ்ணன்
சா. கந்தசாமி
கி. ராஜநாராயணன்
சாரு நிவேதிதா
சுந்தர ராமசாமி
சோ. தர்மன்
தி. ஜானகிராமன்
நாஞ்சில் நாடன்
பிரபஞ்சன்
பெருமாள் முருகன்
ஜெயமோகன்
பாவண்ணன்
வண்ணதாசன்
வண்ணநிலவன்
பிரமிள்
ஆத்மாநாம்
மனுஷ்ய புத்திரன்
நகுலன்
தேவதச்சன்
தேவதேவன்

இந்தப் பெயர்களில் சிலவற்றை நீங்கள் வாசித்திருக்கலாம், வாசிக்காதவர்ளை தேடிக் கண்டடையலாம்.

இவர்களது எழுத்துகளே எனக்குள் இருந்த கவிஞனை, எழுத்தாளனைவெளியே கொண்டுவர மிக முக்கியக் காரணிகள் எனலாம்.

### ஏன் இலக்கியம் வாசிக்க வேண்டும்?

இலக்கிய வாசகனது வாழ்க்கையானது பிறவாழ்க்கைகளிலிருந்து பல வகையிலும் தனித்துவமானது. என்னளவில் மூன்று

முக்கிய காரணங்களால் இலக்கிய வாசிப்பு வாழ்வை மேன்மைப்படுத்துகிறது.

அந்த மூன்றுகாரணங்கள் எவை எனில்,

1. நம் மொழியோடு நம்மை இணக்கமாக வைத்திருப்பது
2. வாசிப்பின் வழியே நம் எழுத்தை கண்டடைவது
3. எழுத்தின் வழியே வாழ்வின் உன்னதங்களை அடைவது
4. புற வாழ்க்கையானது எல்லைக்குட்பட்டது.
5. புறவாழ்க்கைக்கு ஒரே ஒரு வானம் தான் இருகிறது. இலக்கியமோ பிரபஞ்சத்தின் புதிர்நிறைத்த பக்கங்களுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.நீங்கள்ஒருபடைப்பாளனாகஉயரும் பொழுது, எழுத்தை ஆள்பவனாக மாறும்போது இவ்வுலகம் நமக்கு எண்ணற்ற கதவுகளை திறந்துவிடுகிறது. நீங்கள் தேடியவை உங்களைத் தேடி வரும்.

உங்களுக்குள் ஒளிந்திருக்கும் எழுத்தாளனை அல்லது கவிஞனை தைரியமுடனும் மன உறுதியுடனும் வெளியே கொண்டு வர வேண்டும். அதுவே உங்களது வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றும்.

இன்றைய தலைப்பானதற்கால இலக்கியங்களின் போக்கு பற்றிய என் பார்வையை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

நாம் வாழ்கின்றஇந்த நவீன உலகமானது புதிய தொழில்நுட்பங்களைதினம் தினம் நமக்கு அறிமுகப்படுத்திய படியே இருக்கிறது. இன்றைய தலைமுறையின் வாசிப்புப் பழக்கத்தை ஸ்மார்ட் போன்களும், சமூக வலைத்தளங்களும் வெகுவாக பாதித்திருக்கிறது. தொடர் வாசிப்பு ஒன்றே நம்மை மேன்மைப்படுத்தும் எனத்தெரிந்தும் நாம் ரீல்ஸ் பார்ப்பதிலும், பேஸ்புக்கிலும் நம் நேரத்தைவீணடித்துக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமின்றிதொடர்ந்து அலைபேசியில் நேரம் செலவழிப்பதால் பிற மனிதர்களுடனான உரையாடல்கள் வெகுவாக குறைக்கப்பட்டு மனச்சிதைவுக்கு உள்ளாகும் நிலையும் வரலாம். இந்நிலையிலிருந்து நம்மை மீட்டெடுத்து வாழ்வின் பரிபூரணங்களை நமக்கு உணர்த்தவே இன்றைய இலக்கியங்கள் எழுதப்படுகின்றன.

கடந்தவருடம் வெளியான என்னுடைய தேரி நாவலின் பேசுபொருளை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். தேரி நாவலானது இந்த போப் கல்லூரி அமைந்திருக்கும் நிலப்பகுதியில் இருக்கும் தேரிக்காட்டைப் பற்றியது. தேரிஎன்றவுடன்நமக்குசெம்மண் பூமியும், பனை மரங்களும், முந்திரி மரங்களுக்கும் நினைவுக்கு வந்தாலும், தேரியின் நிலத்தடி நீர் சுத்தமான நீராக பல வருடங்களுக்கு முன்பு வரை இருந்தது. கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்களுடைய சுயலாபத்திற்காக தேரியில்இடம் வாங்கி அந்த நிலத்தடி நீரை அளவுக்கு அதிகமாக உபயோகித்த தால்இன்று தேரியின் நீர்வளம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இதையே என் தேரி நாவல்விரிவாக பேசுகிறது. தேரி மண்ணைப் பற்றியும் அதன் நீர்வளம் பற்றியும் அறியாத ஒரு வாசகன் நாவலை வாசிக்கும் போது மறைந்துகொண்டிருக்கும் மண்வளமும், நீர்வளமும் அதன் பின்புலத்தையும் அறிந்துகொள்கிறான். அலைபேசிக்குள் அமிழ்ந்து நேரத்தை விரயமாக்காமல் புத்தகத்தை நோக்கி செல்லும் போதுவாசகனுக்கு கிடைக்கும் நன்மைகள் எண்ணிலடங்காதது. இதுவே நவீன இலக்கியத்தை வாசிப்பதினால் அடையும் பயன்கள்.

நவீனத்துவம், பின்நவீனத்துவம் என பல்வேறு இசங்களின் பகுப்பாக இன்றைய இலக்கியங்கள் எழுதப்பட்டாலும், அவை போதிப்பது அன்பையும், கருணையும், வாழ்வு எனும் பெரும் அற்புதத்தையும் மட்டுமே. அவ்வகையில், இன்று எழுத்தப்படுகின்ற இலக்கிய நூல்கள் நம் வாழ்வின் தரத்தை ஏதோ ஒரு வகையில் முன்னேற்றக்கூடியதாகவே இருக்கிறது. அந்த இலக்கிய நூல்களை தேடிக் கண்டடைவதே நம் வாழ்வினை அடுத்த நிலைக்கு நகர்த்துவதற்கு நாம் தயார்படுத்தும் முதல்மைல்கல். தொடர்ந்து வாசிப்போம். வாழ்த்துகள்.